**செ.வெ.எண்: 18** **நாள்:15.08.2018**

# அரியலூர் மாவட்டம், மணக்கால் கிராமத்தில் சிறப்பு கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி இஆப., அவர்கள் சிறப்பு பார்வையாளராக பங்கேற்றார்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், மணக்கால் கிராமத்தில் **"சுதந்திர தினவிழாவையொட்டி"**, நடைபெற்ற **சிறப்பு கிராம சபைக்கூட்டத்தில்** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி இஆப.,** அவர்கள் சிறப்பு பார்வையாளராக பங்கேற்று, ஆலோசனைகளை வழங்கினார்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது:-**

அரசு வகுக்கும் திட்டங்களை மக்களாகக் கூடி தங்களுக்குள் பேசி தீர்மானமாக நிறைவேற்றி கொள்ளக்கூடிய வகையில் ஆண்டிற்கு நான்கு முறை சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி, மே தினம் ஆகிய நான்கு நாட்கள் சிறப்பு கிராம சபாக் கூட்டம் நடத்திட அரசு திட்டமிட்டுள்ளதன் அடிப்படையில், சுதந்திர தினமான இன்று (15.08.2018) மாவட்டத்திலுள்ள 201 ஊராட்சிகளிலும் சிறப்பு கிராமசபாக் கூட்டம் நடத்தப்பட்டுவருகிறது.

இந்த ஊராட்சியில் நடைபெறும் பிளாஸ்டிக் பொருள்கள் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை தடை செய்தல். கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் (VPDP) குறித்தும், அந்தியோதயா இயக்கம் முழு இலக்கினை அக்டோபர் 2 - 2020-க்குள் எய்திட தீர்மானம் குறித்தும். கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்தும், குடிநீரை சிக்கனமாகவும் முறையாகவும் பயன்படுத்துதல் குறித்தும், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், தூய்மை கணக்கெடுப்பு குறித்தும், முழு சுகாதார நிலையை தக்கவைப்பதற்கான நடவடிக்கை எடுப்பது குறித்தும், திடக்கழிவு மேலாண்மை குறித்தும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாடுகள், பணிகளின் முன்னேற்ற நிலை குறித்தும், மகளிர் முன்னேற்றத்திற்கு அரசின் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் 2018-19 ஆண்டுக்கான திட்ட பயனாளிகளின் பட்டியல் ஒப்புதல் பெறப்பட்டது. பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் I, பகுதி XI (2018-19)-ன் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள சாலைப்பணிகள் உயர்மட்ட பாலங்கள் மற்றும் தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் (TNRRIS) பணிகளை கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டத்தில் தேர்வு செய்து கிராம சபை கூட்டத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது. ஊராட்சிகளில் நடைபெறும் பல்வேறு திட்ட பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விவரங்கள் குறித்தும், நியாவிலை அங்காடிகளின் ஆவணங்களை சமூக தணிக்கைக்கு உட்படுத்தி கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட்டது. குழந்தை கடத்தல், குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர் முறை, குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்களை களைவது குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி இஆப.,** அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கே.லோகேஷ்வரி, ஊராட்சிகள் உதவி இயக்குநர் பழனிச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அகிலா, ஜாகீர்உசேன் மற்றும் அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**